பக்கங்கள் 6

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 23 | சித்திரை 9 | ஜ. ஆகிர் 15 | இதழ் 70

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 21 - 4 - 1981

-4-1981

## 'அனு' யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் மா அதிபர் திரு. அனுசெனிவரத்தின நேற்று யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம்செய்தார்.

சிலமணிநேரம் இங்கு தங்கியிருந்த பொலிஸ் மாஅதிபர், வடபிராந்திய பிரதிப்பொலிஸ் மா அதிபர் திரு பி. மகேந்திரன் மற்றும் யாழ் பொலிஸ் அதிபர், உதவிப் பொலிஸ் அதிபர்களுடன் வடபகுதி குற்றச்சம்பவங்கள் தொடர்பாக கலந்துரையாடிவிட்டு, நேற்று மாலை கொழும்பு திரும்பினர்.

## பரீட்சை முடிவு

(கொழும்பு)

நேற்று ஆரம்பமான க. பொ. த (உயர் தரம்) பரீட்சைக்கு மொத்தம் 86,709 மாணவர்கள் தோற்றினர் இப்பரீட்சை நாட்டிலுள்ள 618 பரீட்சை நிலையங்களில் ஆரம்பமானது.

பரீட்சை முடிவுகள் ஐந்து வாரங்களில் வெளியாகும் என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார்.

★ சி. ஐ. டி. பகுதியிலிருந்து

# குட்டிமணி மற்றும் 90 பேரின் தஸ்தாவேஜுகளை காணவில்லை

(கொழும்பு)

**குட்டிமணி உட்பட தொண்ணூறு பேரின் கைவிரல் அடையாளங்கள், புகைப்படங்கள் மற்றும் முக்கிய தஸ்தாவேஜுகள் காணமற்போய் விட்டதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.**

பருத்தித்துறை தொகுதியிலுள்ள மணற்காடு எனுமிடத்தில் இம்மாதம் ஐந்தாம் திகதி குட்டிமணியும் மேலும் இருவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

1974-ம் ஆண்டு சட்டவிரோத தக்கடத்தலில் குட்டிமணி ஈடுபட்டிருந்ததாக சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் கொண்ட தஸ்தாவேஜுகளும் காணமற் போய்விட்டனவாம்.

காணமற்போன தஸ்தாவேஜுகள் அனைத்தும், விசேஷ துப்பறியும் பிரிவில் இருந்ததாகச் சொல்லப்பட்டது.

குட்டிமணி மற்றும் 90 பேரும் வடபகுதி பயங்கரவாதத்துடன் சம்பந்தப்பட்டவர்களாக இருந்ததற்கான தஸ்தாவேஜுகளே காணமற் போய்விட்டனவாம்.

# பொதுமக்கள் பாதிப்பு பற்றி ஜனாதிபதிக்கு 'அமிர்' புகார்!

(கொழும்பு)

**வடபகுதியில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் தொடர்பாக யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நடைபெற்றுவரும் திடீர்ச் சோதனைகளினால் பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தமிழ் அரசியல் தலைவர்கள் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.**

**இது குறித்து, எதிர்க்கட்சி முதல்வரும், காங்கேசன்துறை எம். பி. யுமான திரு. அ. அமிர்தலிங்கம்; ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கும் முறையிட்டுள்ளார்.**

அண்மையில் நீர்வேலியில் இடம்பெற்ற வங்கிக் கொள்ளை உள்ளிட்டு, வடபகுதியில் நடைபெற்ற பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பாக, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்றுள்ள விசேஷ துப்பறியும் பிரிவினர், இராணுவத்தினரின் உதவியுடன் யாழ் மாவட்டத்தில் திடீர்ச் சோதனைகள் நடத்திவருவது தெரிந்ததே

இச்சோதனைகள் மூலம் அப்பாவி மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் காரணமின்றி இவர்கள் துன்புறுத்தப்படுவதாகவும் பொதுமக்களின் உடமைகளுக்கும் இதன்மூலம் பெருஞ்சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் திரு. அ. அமிர்தலிங்கம் தமது புகாரில் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுத்து, அப்பாவி மக்களுக்கு பாதுகாப்பு அளிக்குமாறு ஜனாதிபதியையும் பிரதமரையும் திரு அ. அமிர்தலிங்கம் கேட்டுள்ளார்.

இதற்கிடையே யாழ். மாவட்டத்தில் மேலும் பலர்,

(8-ம் பக்கம் பார்க்க)

## முதல் நாளன்று சகல கட்சிகளும் 'மௌனம்'

(கொழும்பு)

ஜூன் மாதம் நான்காம் திகதி நடைபெறும்மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தலுக்கான வேட்புமனுப் பட்டியல், நேற்றுமுதல் ஏற்றுக் கொள்ளப்படுமென்று அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அரசியல்கட்சிகள் எதுவுமே நேற்று தங்களது வேட்புமனுப் பட்டியலைத் தாக்கல் செய்யாது மௌனம் சாதித்தன.

அநேகமாக இம்மாதம் 26ம் திகதி அல்லது இறுதி நாளான 27ம் திகதி பிரதான அரசியல் கட்சிகள் தமது வேட்புமனு பட்டியலைத்தாக்கல் செய்யுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### யாழ். மாவட்டத்தில்

ஐக்கிய தேசியக்கட்சி நாட்டின் சகல மாவட்டங்களிலும் போட்டியிடுகிறது. யாழ். மாவட்ட வேட்பாளர் தெரிவு ஓரிரு தினங்களில் பூர்த்திபெற்றுவிடும் என்று கட்சிவட்டாரங்கள் நேற்று நம்பிக்கை தெரிவித்தன.

யாழ். செயலகத்தில் நேற்று எந்தக் கட்சியினரும் வேட்புமனு தாக்கல் செய்யவில்லை.

## சுதந்திரக்கட்சி பட்டியலில் முருகையாவிற்கு 1-ம் இடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி சபைக்கான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் பட்டியலில் திரு. பி. முருகையாவின் பெயர் முதலிடம்பெற்றுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் போட்டியிடுபவர்கள் குறித்து நேற்று மாலை சுதந்திரக்கட்சிப் பிரமுகர் திரு. பி கதிரவேலு இல்லத்தில் நடைபெற்ற கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

இறுதியில் தயாரான பட்டியலில் திரு. பி. முருகையாவின் பெயர் முதலிடம் பெற்றது. இதனை அவர் ஏற்றுக்கொண்டார்.

இவர் தவிர, சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் பட்டியலில் முன்னணி வகிக்கும் ஏனையோ

(8-ம் பக்கம் பார்க்க.

## பூட்டோ குடும்பத்தினர் நாசவேலையில் ஈடுபட்டனராம்

இஸ்லாமாபாத், ஏப். 20

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பூட்டோவின் குடும்பத்தினர், பாகிஸ்தானில் நாசவேலையில் ஈடுபட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு ராஜதந்திரிகளுடன் பூட்டோ குடும்பத்தினர் நெருங்கிய தொடர்புகள் வைத்திருந்தனர் என்றும் வெளிநாட்டுத் தூதரகங்களின் உதவியுடன் பாகிஸ்தானில் நாசவேலை புரிய முயற்சிகள் மேற்கொண்டனர் என்றும், இதற்குப் போதுமான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்றும் பாகிஸ்தான் அரசு பத்திரிகைச்செய்தியொன்று கூறுகிறது.

வேலை பெற்றுத் தருவதாகக் கூறி

## பத்து இளைஞர்களிடம் ரூ. 1,80,000 மோசடி!

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை, அராலி கிழக்கு ஆகிய இடங்களைச் சேர்ந்த பத்து இளைஞர்களை ஈராக்கில் வேலை பெற்றுத் தருவதாக அழைத்துச் சென்று ஒரு லட்சத்து எண்பதினாயிரம் ரூபா மோசடி செய்ததுடன், வேலையும் பெற்றுக் கொடுக்காமல், பாகிஸ்தானிலுள்ள லாகூரில் அவர்களைத் தவிக்கவிட்ட சம்பவம்பற்றி யாழ். பொலிஸ் அத்தியட்சகருக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செ. சிவனடியான் என்பவர் லாகூரில் பலகஷ்டங்களை அனுபவித்து நாடுதிரும்பியுள்ளார். இவருடன் சென்ற ஒன்பது பேரும் ஈரான் வரை சென்றுவிட்டு, வேலையில்லாமல் பல இன்னல்களுக்கிடையே நாடு திரும்பியுள்ளனர், இவர்களை தம்பிமுத்து புஷ்பராசா என்பவர் அழைத்துச் சென்றதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த செ. சிவனடியான், அராலி கிழக்கை சேர்ந்த ஐ. தர்மராசா, பொ. இராசதுரை, ஆ. சண்முகராசா, மா. பா. பஞ்சாட்சரம் க. சத்தியானந்த சர்வகுலசிங்கம், சி.

(8-ம் பக்கம் பார்க்க)

சைவ உணவின் சுவைமாளிகை

இல்லாள் இல்லையாயினும்
அறுசுவை உணவை உண்டு மகிழ்ந்திட
நகரில் நாகரிக சைவ உணவகம்

**அமுதசுரபி**

408, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
பஸ்நிலையம் முன்பாகவுள்ளது.

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடும், வீடு கட்டக்கூடிய காணியும், நாவற்குழியில் வீடுகள், மில் கட்டுவதற்கேற்ற காணிகளும் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: சட்டத்தரணி இ. பாலசுப்பிரமணியம், 52, வைமன் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 334. (8879)

சாவகச்சேரி கண்டி வீதியில் 500 யார் உள்ளே 2¼ பரப்பு வீட்டுடன் காணி, கல்லூரி, புகையிரத நிலயத்திற்கு அண்மையில். வ. செல்லத்துரை, மீசாலை. 8923

நீர்வேலி அரசகேசரிப்பிள்ளையார் கோவிலில் பாவிப்பிலிருந்த லிஸ்றர் (Lister-10-H.P. 5.K.W) ஜெனறேற்றர் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- சி. மார்க்கண்டு, 50, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம். 8893

## நயினாதீவு கிராமசபை நூல்நிலையப் பரிசாரகர் பதவிக்கான வெற்றிடம்

நயினாதீவு கிராமசபை நூல்நிலையப் பரிசாரகர் பதவிக்கான, நயினாதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆண் பெண், இருபாலாரிடமும் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பகாரர் 1-05-81-ம் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல்வேண்டும்.

க. பொ. த. ப. (சாதாரண) அல்லது சி. பா. த. ப. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், தமிழ் மொழியில் மேற்படி பரீட்சை ஒன்றில் விசேட சித்திபெற்றவராகவும் இருத்தல்வேண்டும்.

விண்ணப்பங்கள் 8-05-81-ம் திகதிக்குப் பிந்தாது, விசேட ஆணையாளர் கிராமசபை நயினாதீவுக்குப் பதிவுத்தபாலில் அனுப்புதல்வேண்டும்.

க. பரமலிங்கம்
விசேட ஆணையாளர்

கிராமசபை,
நயினாதீவு. 8926

## குடிநீர்ப் பிரச்னை தீர்ந்தது

(மண்டைதீவு)

மண்டைதீவுப்பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவிர்த்தி செய்யும் நோக்கமாக இப்பகுதிமக்களுக்கு டிராக்டர் மூலம் வீட்டுக்கு இரண்டுகலன் வீதம்தினமும் குடிநீர்தற்போது வழங்கப்பட்டுவருகின்றது.

மேற்படிகுடிநீர் விநியோகம் தீவுப்பகுதி அரசாங்க அதிபர் திரு. ஆ. குணநாயகத்தின்மேற்பார்வையில் நடைபெற்றுவருகின்றது.

இப்பகுதியில் நிலவியகடுமையான குடிநீர்த்தட்டுப்பாடு பற்றி "ஈழநாடு" இதழில் வெளிவந்த செய்தியைஅடுத்து இந்நடவடிக்கைமேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவருகிறது. (அ)

## இடமாற்றம்

(சுழிபுரம்)

சுழிபுரத்தைச்சேர்ந்த டாக்டர் எஸ். சின்னையா தொல்புரம் அரசினர் வைத்தியசாலைக்கு இம்மாதம் முதல்இடமாற்றம்பெற்றுள்ளார்.

தொல்புரத்தில் கடமையாற்றிய டாக்டர் ஆ. இராசநாயகம் அனுராதபுர வைத்திய அத்தியட்சகர் பிரிவிற்கு இடமாற்றம்பெற்றுள்ளார்.

## பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி 43/4, இரண்டாம் ஒழுங்கையில் நிரந்தர வசிப்பிடங் கொண்ட டேவிட் நல்லையா தங்கத்துரை ஆகிய நான் இன்றுமுதல் நல்லையா டேவிட் தங்கத்துரையென பெயர் மாற்றம் செய்துள்ளேன் என பொதுமக்களுக்கும், ஸ்ரீலங்கா குடியரசிற்கும் பகிரங்கமாக அறிவிக்கின்றேன்.

நல்லையா டேவிட்
தங்கத்துரை,
43/4, இரண்டாம்
ஒழுங்கை, மின்சார
நிலைய வீதி,
(8925) யாழ்ப்பாணம்.

## ஏலவிற்பனை

நடுக்கட்டப்பட்ட, சாய்மனைக் கதிரைகள், கதிரைகள், சுவர்மணிக்கூடுகள், ரேடியோக்கள், செப்புக் கிடாரங்கள், அலுமாரி, பெற்றோல் ராங், பெற்றோல் மாக்ஸ், திராந்தி மரங்கள் உட்படப் பல பொருட்கள் 28-4-81ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணி தொடக்கம் பொதுக் களஞ்சியத்தின் மூன் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். தெரிவு செய்யப்பட்ட கேள்விகாரர்கள் பொருட்களின் கேள்வித்தொகையை உடன் செலுத்திப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
20-4-81 (8928)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

வவுனியா
மாவட்ட நீதிமன்றத்தில்

வவுனியா, யாழ்ப்பாணம் வீதியைச் சேர்ந்த, குமாரவேலு ஐயாத்துரை என்பவரின் மரண சாதனம் அற்ற மரணச்சொத்துக்களின் சம்பந்தமான விடயத்தில்.

—மரணமெய்தியவர்

டாக்டர் ஐயாத்துரை ஞானேஸ்வரன், வவுனியா
—மனுதார்

மரணச்சொத்து) 517
நியாயாதிக்கம் )

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில், அதற்கிணங்கப் பின்றுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு வைகாசி மாதம் 20-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1981-ம் ஆண்டு சித்திரை மாதம் 8-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

(ஒப்பம்)
கே. சதானந்தன்
பதிவாளர்

தயாரித்தது:
(ஒப்பம்)
எம். சிற்றம்பலம்
மனுதாரின்
பதிவுபெற்றதரணி. 8854

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

### கதிரவேற்பிள்ளைக்கு எடுக்கும் விழா

# சைவத்துக்கும், தமிழுக்கும் எடுக்கும் விழாவாகும்!

## சதாவதானிநினைவுவிழாவில் பரு. நீதவான் உரை

(புலோலி)

"ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பின் சைவத்தையும் தமிழையும் தமது இருகண்கள் என எண்ணி இவை இரண்டையும் வளர்த்த மேலைப் புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளைக்கு எடுக்கும் விழா சைவத்துக்கும் தமிழுக்கும் எடுக்கும் விழாவாகும்.

இவ்வாறு சதாவதானி கதிரவேற்பிள்ளையின் 74-வது ஆண்டு நினைவுவிழாவில் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். மகேசன் குறிப்பிட்டார்.

மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையமுன்றலில் நிலயக்காப்பாளரும் பருத்தித்துறை நகராளுமன்ற உறுப்பினருமான திரு மு. பொ. வீரவாகு தலைமையில் இவ்விழாநடைபெற்றது. சதாவதானி கதிரவேற்பிள்ளையின் உருவச்சிலைக்கு நீதவான் திரு. மகேசன் மலர்மாலை சூட்டிய பின் சட்டத்தரணி திரு. சோமசுந்தரத்தின் வரவேற்புரையுடன் விழா ஆரம்பமானது தொடர்ந்து உரையாற்றிய நீதவான் திரு.மகேசன் சொன்னதாவது

சதாவதானி கதிரவேற்பிள்ளை ஆறுமுகநாவலர் விட்டுச் சென்ற தமிழ்ப்பணி, சைவப்பணிகளை நமது நாட்டில் மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் தொடர்ந்து நடாத்திய பெரியார் சைவமும் அதன் வளர்ச்சிக்கருவியாகிய தமிழும் வாழ பணிசெய்து கிடந்த பெரியார் வரிசையிலே சதாவதானி கதிரவேற்பிள்ளைக்குச் சிறந்த தனியிடம் உண்டு

தமிழ்வாழ்ந்தால் மட்டும் போதாது சைவமும் வாழவேண்டும் தமிழ் மறுமலர்ச்சியடைந்தால் மட்டும் போதாது சைவமும் மறுமலர்ச்சியடைய வேண்டுமெனக்கருதுவோர் மிகக்குறைவாகவே உள்ளனர். சைவத்தின் தனிமொழியாக விளங்குவது தமிழ்மொழி

சங்கம்நிறுவி தமிழ் வளர்த்த பாண்டிய மன்னரும் திரிபுரமெரித்தவிரிசடைக் கடவுளும் குன்றெறிந்த முருகவேளும் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்ததாகவும் சைவத்தின் பின்னணியிலே தமிழ்வளர்க்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகிறது.

சமயங்கள் எல்லாம் இறைவனை அடையும் மார்க்கங்களையே காட்டுகின்றனவென்றாலும் இவற்றினுள் சைவசமயம் தனிப்பெரும் சிறப்புக் கொண்டதை நாம் காணமுடிகின்றது. மெய்ஞானிகள் கண்டறிந்த சைவசமய உண்மைகள் இன்று விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களால் உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றன. விஞ்ஞான வளர்ச்சி அதிகரிக்குந்தோறும் சைவ சமய உண்மைகள் துலங்கி வருகின்றன.

கடந்த நூற்றுண்டிலே சைவசமயம் எவ்வளவு தூரம் துலக்கமாகவில்லை. சைவசமயத்தைப் பற்றிச் சைவசமயிகள்கூட அறியாமல் இருந்தனர். அப்படியாக இருந்த காலகட்டத்திலே சதாவதானி கதிரவேற்பிள்ளைபோன்ற பெரியோர்கள் தோன்றி மேன்மைகொள் சைவ நீதி உலகமெல்லாம் விளங்கச் செய்தார்கள். சைவத்தையும் தமிழையும் இரு கண்களெனப் போற்றி இப்பெரியார்கள் ஆற்றிய தொண்டுகளுக்கு சிறப்பாகச் சைவ மக்கள் அப்பெரியார்களுக்குக் கடமைப்பட்டவர்களாவர்'' என்றார்.

யாழ் பல்கலைக்கழகத்தமிழ்த்துறை விரிவுரையாளர் திரு. நா சுப்பிரமணிய ஐயர் உரையாற்றுகையில்,

''ஆறுமுகநாவலர் சைவத்தையும் தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்டார். அவர் சைவத்தையும் தமிழையும் வளர்க்க பல்வேறு வழிவகைகளை மேற்கொண்டார். ஆனல் அவரின் பின்னர் தோன்றிய இன்னும் பலர் சைவத்தையும், தமிழையும் வளர்த்தார்களாயினும் அவர்கள் பல்வேறு வழிகளைக் கையாண்டதாகத் தெரியவில்லை. ஆனல் ஆறுமுகநாவலரின் பின்னர் பல்வேறு வழிவகைகள்மூலம் சைவத்தையும், தமிழையும் வளர்த்தவர் சதாவதானி கதிரவேற்பிள்ளையேயாவர்.

ஆசிரியை செல்வி விஜயலட்சுமி சச்சிதானந்தன், யாழ். கம்பன் கலைக்கழகத்தைச் சேர்ந்த திரு. இ ஜெயராஜ் ஆகியோரும் உரையாற்றினர்கள்

இவ்விழாவையொட்டி நடாத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசில்களை நீதவான் திரு. மகேசன் வழங்கினர்.

விவாத அரங்கும் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## சி. பா. த. ஐக்கிய முன்னணி 14 வேட்பாளரை நிறுத்தும்

(அரியாலை)

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியின்சார்பில் வேட்பாளர்களை நிறுத்திப் போட்டியிடுவதென்று யாழ்ப்பாணம் சன்மார்க்க வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற சிறுபான்மைத் தமிழர்களின் பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளடங்கிய கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு வடிவேலு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தேர்தல் வேலைகளைக் கவனிக்க 15 பேர்களைக் கொண்ட குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. குழுவின் செயலாளர்களாக திரு பி. ஜே அன்ரனி, திரு. சிவகுருநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போட்டிக்கு 14 பேர்களை நிறுத்துவதென்றும், கூடுமானவரையில் அந்தந்தத்தொகுதியிலுள்ளவர்களுக்கேவேட்பாளர் பட்டியலில் இடமளிப்பதென்றும் முடிவுசெய்யப்பட்டது. (அ)

## அ. செ. மு நிதி

எழுத்தாளர் அ. செ. மு நிதிக்கு ஏற்கனவே சேர்ந்த தொகை: ரூ 627-00

| | |
|---|---|
| புலவர் பார்வதிநாத சிவம், தெல்லிப்பழை | 10-00 |
| கோகிலா மகேந்திரன் விழிசிட்டி | 10-00 |
| தாமரைச்செல்வி பரந்தன் | 10-00 |

## "கிராமாபிவிருத்திச் சங்கங்கள் கல்வி கலாச்சார வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும்''

(அரியாலை)

"சன சமூக நிலையங்கள் கிராம அபிவிருத்தியில் ஈடுபாடு கொண்டு உழைக்கவேண்டும். இந்நிலையங்கள் கிராமத்தில் கலை, கலாசாரம், கல்வி, இசை, நாடகத்தை வளர்க்கத் தப்மாலான பங்கைச்செய்ய வேண்டும். உரும்பிராய் பகுதியில் சில கிராமங்கள் பின்தங்கிய நிலையில் இருக்கின்றன: இவற்றின் தொழில்வளங்களையும்குடிசைக் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்ய வேண்டும்''

இவ்வாறு உரும்பிராய் மேற்கு ஸ்ரீ வைத்தீஸ்வர சன சமூக நிலயத்தின் 26வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக்கலந்து கொண்ட கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணர் பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் திரு. க. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''இவ்வாண்டை அரசாங்கம் கிராம அபிவிருத்தியாண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இதனைப் பயன்படுத்தி இப்பகுதியின் அபிவிருத்திக்கு வேண்டியவற்றை செய்துதர முயற்சி செய்வேன்'' என்றார்

திரு. இராமதேவன், திரு. க. கிருஷ்ணராசா, திரு. எம். எஸ் அருளம்பலம் ஆகியோர் உட்பட பலர் இங்கு உரையாற்றினர். (வெ)

## கம நலச் சேவை மத்திய நிலையங்களைத் தரம் பிரிக்க நடவடிக்கை

(புலோலி)

யாழ். மாவட்டத்திலுள்ள கமநலச்சேவை திணைக்கள நிலையங்களைத் தரம் பிரித்து அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளைக் கமநலச் சேவைத்திணைக்களம் மேற்கொண்டுவருகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள பதினெட்டு கமநலச்சேவை மத்திய நிலயங்களும் அவைகளின் நடவடிக்கைகளுக்கேற்பத் தரம்பிரிக்கப்பட்டு நிதி குறைவான கமநலச்சேவை மத்திய நிலயங்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கமநலச்சேவை மத்திய நிலயங்களைத் தரம்பிரிப்பதற்கான விபரங்களைத் திரட்டித்தருமாறு கமநலச்சேவை ஆணையாளர் திரு ஜீ ஜீ விக்கிரமசிங்கா யாழ் கமநலச்சேவைத் திணைக்களத்தைப் பணித்திருந்தார். இதற்கிணங்க யாழ் மாவட்ட கமலச்சேவை உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் கமலச்சேவை மத்திய நிலயங்களைத் தரம்பிரிப்பதற்கான விபரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

### மணிவாக்கு

மெய்ஞ்ஞானம் நூல்களினின்று வருவதன்று. அநுபூதியினின்று அது வருகிறது. நூல்கள் மெய்ஞ்ஞானத்துக்குத் து ... புரிவதுமுண்டு, தடையாவதுமுண்டு.

— அருள்விருந்து.

# நமது நோக்கு

## ஜனநாயக உரிமைகள்

"இலங்கையின் ஆட்சியாளர்கள் இந்த நாட்டு மக்களே! அந்த மக்கள் தங்கள் வாக்கின்மூலம் ஒரு ஆட்சியைத் தெரிவு செய்யும் உரிமையைப் பாதுகாக்க நாம் உறுதி பூண்டுள்ளோம். மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதில் நாம் உறுதியாகவே இருப்போம்."

இந்தக் கருத்தை ஜனாதிபதி ஜயவர்த்தன அடிக்கடி பொதுக் கூட்டங்களில் வழங்கிவருவதை நாம் கவனிக்கக் கடமைப்பட்டுள்ளோம்

ஆசிய ஆபிரிக்க நாடுகளிற் பெரும்பான்மையானவை மக்கள் ஆட்சியைக் கண்டதில்லை; இன்னும் சில நாடுகளில் சதிப் புரட்சி, இராணுவ தலையீடுபோன்ற குழப்பங்களால் மக்கள் ஆட்சி மறைந்துவிடுகிறது. உண்மையில் இலங்கை பல நாடுகளுக்கு முன்மாதிரியாக இருப்பதில் நாம் பெருமை கொள்ளவேண்டும்.

வாக்குரிமை பெற்று 50 வருடங்களுக்குப்பின், சுதந்திரம் பெற்று 33 வருடங்களுக்குப்பின், இந்த நாடு கண்ட ஆட்சி மாற்றம் ஒவ்வொன்றும் பொதுத் தேர்தல்மூலம் என்பது ஒரு மகத்தான சாதனை.

ஜனநாயக உரிமைகள் எல்லாவற்றிலும் முதன்மை பெற்றது மக்கள் வாக்குரிமை நாட்டில் வாழும் ஒவ்வொரு வாக்காளனும் தனது உரிமையைச் செலுத்தி அமைக்கும் ஆட்சியே மக்கள் ஆட்சி.

இந்த உரிமை காலத்துக்குக்காலம் குறிப்பிட்ட கால எல்லையில் திரும்பவும் பயன்படுத்தப்பட வேண்டும் இதுவும் மிகமுக்கியம்! ஆட்சியில் அமர்ந்தபின் அதைவிட்டுப்பிரியும் காலம்வர, மக்கள் ஆதரவை மீண்டும் பொதுத்தேர்தல் மூலம் பரிசோதிக்கவேண்டியது வரையறுத்திருக்கின்றது

கடந்த ஆட்சியில் இக்காலவெல்லை மீளப்பட்டதைக் கருத்தில் கொண்டே இந்த மக்கள் உரிமையை ஆட்சியின் கடமையை ஜனாதிபதி வற்புறுத்துவதாகக் கொள்ளவேண்டும்.

ஆட்சியில் அமர்ந்த அரசு, தன்னுடைய பலத்தைப் பரீட்சிக்க நாணுவது இயல்பு எதிர்க்கட்சி எழுப்பும் பிரதிவாதங்கள், ஆட்சியாளரின் குறைபாடுகள் இவையெல்லாம் ஒருங்கே மோத, பொதுத்தேர்தல் அபாயமாகத்தோன்றும். இருந்தும் அது நடந்தே தீரவேண்டும்.

அந்த நிப்பந்தத்தை தவிர்க்கமுடியாத தலையிடியை நாளாந்தம் கவனித்துவந்தால் அடுத்த பொதுத்தேர்தல் அதிக பயம் ஏற்படுத்தமாட்டாது.

ஆளுங்கட்சியின் அதிகார வேட்கை, எதிர்க்கட்சியை மதிக்க விடுவதில்லை, அவர்களும் ஆட்சியில் பங்கு கொண்டவர் என்ற கோட்பாடு மரபு முறையாக வந்துவிட்டால் ஆட்சிமாற்றத்தால் மக்கள் அவதிப்படமாட்டார்கள்.

எதிர்க்கட்சியை ஒழித்துக்கட்டிவிட்டால் அதன் செல்வாக்கை எவ்வகையிலும் குறைத்து விட்டால் ஆளுங்கட்சி பலமடையுமென்பது தவறான கொள்கை. மாறிமாறி ஆட்சிக்கு வந்த இருகட்சிகளும் இத்தவறுக்குப் புறம்பானவையல்ல.

ஜனநாயக அமைப்பில் வேறுபாடு இருந்தாலும், ஜனநாயக அடிப்படைக் கொள்கைகள் புனிதமானவை. தேர்தலில் வெற்றி பெற்ற எம். பி., வெற்றி பெற்றகட்சியினர், அமைச்சரவையினர் பிரதமமந்திரி, ஜனாதிபதி இவர்கள் அனைவரும் கட்சிபேதமற்று தத்தம் தொகுதிக்கும் நாடு முழுவதற்கும் பணிபுரியக் கடமைப்பட்டவர்கள்.

## சிரிப்பான செய்தி

சிரிப்பான செய்தியென்றால் அது தலைநகரிலே தயாரிக்கப்பட்டதாயிருக்கும்.

கெட்டும் பட்டணம் என்பார்கள்; அதுவும் தலைப் பட்டணம் என்றால் பேசவேண்டுமா?

கொழும்பு மாநரசபை எல்லைக்குள் 1000க்கு மேலான உத்தரவற்ற உணவு விடுதிகள் நடைபெற்று வருவதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது இதனால் பொது மக்களின் சுகாதாரத்துக்கு தீங்கு விளைகிறதாம்.

இதற்குரிய நடவடிக்கை, அவ்வித உணவு விடுதிகளை முற்றாக ஒழிப்பதற்கு மாநகரசபை சட்டத்தில் திருத்தம் கொண்டுவரத் தீர்மானித்திருக்கிறது

உத்தரவற்ற உணவு விடுதிகள் சுகாதாரத்துக்குத் தீங்கு விளைப்பது உண்மையில் சிரிப்பை உண்டாக்கும் செய்தி.

உணவு விடுதிகள் இயல்பாகவே சுகாதாரத்துக்குத் தீங்கு விளைப்பவை; அதுவும் உத்தரவற்ற விடுதிகளானால் தீங்கு நினைக்கமுடியாதளவு தீங்கு; எனவே செய்தியில் என்ன புதுமையுண்டு?

ஹோட்டல்கள், போசன சாலைகள், உணவுவிடுதிகள், சாப்பாட்டுக் கடைகள், சாப்பிடும் இடங்கள் இவையெல்லாம் பெயரளவில் அந்தஸ்து வேறுபாடுஉள்ளவை; உண்மையில் எல்லாம் ஓரினம்; ஓர்குலம்; எல்லாம் இந்நாட்டு உற்பத்திகள்.

மேனாட்டு அடிப்படையில் அமைந்த ஹோட்டல்களைத்தவிர மற்றவையெல்லாம் சாப்பிடும் இடங்களே! செந்தமிழில் சொல்லும் போது அழகு தோன்றும் எங்கள் மொழியின் இனிமை அவை எல்லாவற்றிற்கும் வர்ணம் தீட்டி விளம்பரம் செய்கிறது

உண்மை நிலையை விளக்குவது ஆங்கிலப் பெயரே! Eating House - சாப்பிடும் இடம் நக்கீரரைப்போல் குற்றம் குற்றமே என்று சொல்கிறது.

யாரைச் சாப்பிடுவது? பெயரெச்சம் விளக்கும் செயப்படுபொருள் தொக்கு நிற்கின்றது.

மக்களைச்சாப்பிடும் இடம் என்றால் உத்தரவிருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன அவற்றை ஒழிக்க வேண்டும் இன்றேல் அவை பசித்து வருபவர்களைப் பசியாறிவிடும்.

### மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள்

# 'ஹெல்மற்' அணியாவிடின் இனிமேல் தப்பமுடியாது

## பொலிஸார் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

'ஹெல்மற்' அணியாமல் மோட்டார் சைக்கிள்களில் பயணம் செய்பவர்கள்மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ் போக்குவரத்து பொலிஸ் பகுதி மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் அவசியம் 'ஹெல்மற்' அணியவேண்டும் என்ற சட்டம் இம்மாதம் 15-ம் திகதி அமுலுக்குவந்துள்ளபோதிலும் இதுவரை பொலிசார் எவர் மீதும் வழக்குத்தாக்கல்செய்யவில்லை. அநேகரை இதுகுறித்து எச்சரிக்கை செய்துள்ளனர்.

இதுகுறித்து யாழ் போக்குவரத்து பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி திரு சி. ஜோககுமாரன் எம்மிடம் தெரிவித்ததாவது:-

மோட்டார் சைக்கிள் செலுத்துபவர்களும் பின்னால் இருந்து செல்பவர்களும் அவசியம் ஹெல்மற் அணிந்தேசெல்லவேண்டும். பின்னால் இருப்பவர்கள் பெண்களாக இருந்தால் என்ன, சிறுவர்களாக இருந்தால் என்ன ஹெல்மற் அணிந்தே செல்லவேண்டும்.

ஹெல்மற் அணியாது செல்பவர்கள் மீதும் அவர்கள் மீதும் ஓட்டிச்செல்லும் சைக்கிள்களின் சொந்தக்காரர்கள் மீதும் வழக்குத்தாக்கல் செய்யப்படும். அதேபோல சைக்கிள்களின் பின்னால் இருந்து செல்பவர் ஹெல்மற் அணியாது செல்லுமிடத்து அவர் மீது அந்தச் சைக்கிளை ஓட்டிச் செல்பவர் மீதும் அச்சைக்கிள் சொந்தக்காரர் மீதும் வழக்குத்தாக்கல்செய்யப்படும்.

### பின்னால் இருப்பவர்கள்

மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து செல்பவர்கள், பெண்களாக இருந்தாலும்சரி, சைக்கிளின் இருபக்கங்களிலும் கால்களை வைத்துக்கொண்டே இருக்கவேண்டும்; சைக்கிளில் ஒருபக்கத்தில் காலைவைத்துக்கொண்டு இருப்பவர்கள் மீதும் சைக்கிள் ஓட்டுபவர்கள் மீதும் வழக்குத் தாக்கல்செய்யப்படும். (இ)

## ஆஸ்பத்திரியில் திருட்டு

(மண்டைதீவு)

மண்டைதீவு அரசினர் வைத்தியசாலையில் ஆயிரம் ரூபாவுக்குமேல் பெறுமதியான சிறுபொருட்கள் சிலதினங்களுக்குமுன் இரவுகளவுபோய் விட்டது

இக்களவுசம்பந்தமாக வைத்தியசாலை அதிகாரி யாழ் பொலிசில் முறைப்பாடுசெய்ததைத்தொடர்ந்து பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். (அ)

## வேம்பிராய் மக்களின் வீட்டுக்கஷ்டம் நீங்காதா?

கோப்பாய்த்தொகுதியில் உள்ள வேம்பிராய் (கிந்து கிட்டி) எனும் கிராமத்தில் சுமார் 100க்கு மேலான சிறுபான்மைத் தமிழ்க் குடும்பங்கள் வசிக்கின்றன. அங்கு வசிக்கின்ற மக்களுக்குச் சொந்தமான காணியோ, வீடோ கிடையாது. மனிதனின் மிக அடிப்படைத் தேவைகள்கூடக் கிடைக்காது, மிகவும் கஷ்டமான சூழலில் அவர்கள் வாழ்ந்துவருகின்றனர்.

அவர்களின் பிரச்சினைகளை அறியும்பொருட்டு நாம் அங்கு பல தடவை விஜயம் செய்து, அவர்களுடன் உரையாடினோம். புள்ளி விபரங்கள் சேகரித்தோம், சிரமதானங்கள்

### மக்கள் கருத்து

பல செய்தோம், இதன் பின்னர் கோப்பாய் எம். பி. அமரர் கதிரவேலுப்பிள்ளையிடம் இக்கிராம மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைத்தோம். அரசின் தொகுதிக்கான மாதிரிக் கிராமத்தினை அங்கு அமைப்பதன்மூலம் அந்த மக்களது காணி, வீட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியும் என்பதனை எம். பி.யிடம் தெரிவித்தோம்.

அமரர் அங்கு எம்முடன் வந்தார். அந்த மக்களின் ஏழ்மை நிலையையும் காணி-வீடில்லாப் பிரச்சினைகளையும் நன்கு புரிந்துகொண்டார்.

"மாதிரிக் கிராமத்தினை இங்கேயே அமைத்துத்தருகின்றேன்" என அம்மக்களுக்கு வாக்குறுதிகூட அளித்தார். தொகுதிக்கான மாதிரிக் கிராமத்தினை வேம்பிராயில் (கிந்து கிட்டி) அமையுங்கள் என வீடமைப்பு அமைச்சுக்கு சிபார்சு செய்தார். இது தொடர்பாக எமக்குச் சில பணிப்புரைகளை அமரர் தந்தார். அவற்றினை நாம் செயல்படுத்தினோம்.

மாதிரிக் கிராமம் அமைப்பதற்கு வேண்டிய காணியை அரசு சுவீகாரம் செய்துகொண்டது. நில அளவைத் திணைக்களம், நில அளவை செய்து கற்கள்கூட நடப்பட்டுள்ளன அவை இன்றும் அங்கே உள்ளன.

தொகுதிக்கான மாதிரிக் கிராம வேலைகள் உடன் ஆரம்பிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி கடந்த 25-2-81ம் திகதியில்கூட அமரர் சம்பந்தப்பட்ட திணைக்களத்துக்குக் கடிதம் எழுதியிருந்தார். ஆனால் அமரர் மரணமானதும் சிலர் மாதிரிக் கிராமத்தினை மாற்றவேண்டும் என்ற எண்ணம்கொண்டு செயல்பட்டனர். இது எமக்கு வேதனை தருவதாகவிருந்தது.

இது இவ்வாறிருக்க, சகோதரன் ஜெகநாதனின் மக்கள் மன்றக் கடிதம் எமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. நாம் யாருக்கும் எதிரானவர்கள் அல்ல; வேம்பிராய் கிராம மக்களினது காணி-வீடில்லாப் பிரச்சினைகளை நன்கு அறிந்த-தெளிந்த எவரும் அம்மக்களுக்குத் துரோகம் செய்ய மனத்தாலும் எண்ணமாட்டார்கள் என நாம் எண்ணுகின்றோம்.

எது எப்படியிருப்பினும் கூட, கோப்பாய்த் தொகுதிக்கான மாதிரிக் கிராமம் வேம்பிராயில் அமையவேண்டும். அந்த மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும். இதுவே எமது பெருவிருப்பம்.

இது விடயத்தில் நாம் ஒன்று சேர்ந்து அம்மக்களின் உயர்வுக்காகப் பாடுபடுவோம்.

க. ஜீவகதாஸ்
செயலாளர்
அறவழிப் போராட்டக்குழு,
சாவகச்சேரி.

# நாடும் நடப்பும்....

திரு சி. கதிரவேலுப்பிள்ளையின் மறைவினால் காலியான கோப்பாய்த் தொகுதிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி யாரை எம். பி.யாக நியமிக்கப் போகிறது?

இரண்டு மூன்று பெயர்கள் கடுமையாக அடிபட்டன. ஒருவருடைய பெயர் நிச்சயமாகிவிட்டதென்றும் செய்திகள் வெளிவந்தன அநேகமாக இது முடிந்தமுடிபாக இருந்ததென்றும் கூறப்பட்டது.

கிளிநொச்சி எம். பி. பதவியை திரு. வி. ஆனந்தசங்கரி ராஜினாமாச்செய்ய முன்வந்து பத்திரிகைகளுக்கு அறிக்கையும் விட்டார். கிழக்குமாகாணத்தைச்சேர்ந்த ஒருவருக்கு குறிப்பாக கவிஞர் காசி ஆனந்தனுக்காக கிளிநொச்சித் தொகுதியைக் கொடுப்பதற்காகத் தாம் பதவிதுறப்பதாக திரு ஆனந்தசங்கரி தெரிவித்திருக்கிறார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் பதவியை திரு. ஆனந்தசங்கரி ஏற்றுக்கொள்ள இருப்பதால் கிளிநொச்சித்தொகுதியை விட்டுக்கொடுக்கப்போவதாகச் செய்திகள் வெளிவந்தன

மாவட்ட அபிவிருத்திச் சபைகளில் எம். பிக்கள் அங்கம்வகிப்பார்கள்.

திரு ஆனந்தசங்கரி பதவி துறப்பதும் அந்த இடத்துக்கு ஒருவரை நியமிப்பதும் இப்போது கூட்டணிக்குள் சிறுசர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது.

பதவி என்றாலே சர்ச்சையும் பிரச்சினையும் போட்டியும் நிச்சயம் தலையெடுக்கும்.

கோப்பாய்த் தொகுதிக்கு ஒருவரை நியமிப்பதும், கிளிநொச்சித் தொகுதிப் பிரச்சினையும் இப்போதைக்குத் தீர்த்து வைக்கப்படமாட்டாதென்றும் கூட்டணியின் இளம்பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்திச்சபைகளுக்கான தேர்தல்கள் முடிவடைந்த பின்னரே கோப்பாய் கிளிநொச்சித் தொகுதிகளின் நியமனங்கள் செய்யப்படும்.

காரணம்.

இப்பொழுது இந்தநியமனங்களை நிறைவேற்றிவிட்டால் கோப்பாய் எம். பியும், கிளிநொச்சி எம். பியும்தான் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் தேர்தலில் கூட்டணியின் வெற்றிக்காக உழைப்பார்கள்.

0 0 0

மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் தலைவர் பதவிகளைக் கூட்டணி ஏற்கவிருக்கிறது.

இந்தப் பதவி பிரதம மந்திரி பதவிபோன்றதுதான். இதற்கு அதிகாரம் குறைவுதான் ஆளுநர் போன்று ஜனாதிபதியால் நியமிக்கப்படும் மாவட்ட அமைச்சர் பதவிதான் சக்தி வாய்ந்தது.

9 0 0

மாவட்ட அபிவிருத்திச் சபைகளுடன் கூட்டணி திருப்தியடைய வேண்டியதுதான் தமிழ் ஈழம் எங்கே வரப்போகிறது?" என்று ஒருவர் கிண்டலாகச் சொல்லவும் கூட்டணி ஆதரவாளர் சொன்ன பதில், "யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழக வளாகம் அமைக்கப்பட்டபோது நாங்கள் அதுபோதாது என்பதற்காக எதிர்த்தபோதிலும் அந்த வளாகம்வந்ததால்தான் இன்று பல்வேறு பீடங்களையும்

(5-ம் பக்கம் பார்க்க)

# நமீபியவிடுதலைவீரர்களுக்கு இராணுவ நிதி உதவி

## அணிசேரா நாடுகள் தீர்மானம்

அல்ஜியர்ஸ் ஏப், 20. நமீபியவிடுதலைப்போராட்ட வீரர்களுக்கு நிதி உதவியும் இராணுவ உதவியும் அளிப்பதென அணிசேரா நாடுகள் இயக்கம் தீர்மானித்துள்ளது.

அல்ஜீரியாவில் நடைபெற்ற நமீபியாவின் இன்றையநிலை பற்றிய மண்டல சார்பற்ற நாடுகள் ஒருங்கிணைப்புக்கழகத்தின் மந்திரிகள் நிலையிலான அவசரக்கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

நமீபியா நிலைபற்றிய ஐக்கிய நாடுகள் சபை தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கு ஐ. நா. பாதுகாப்புச்சபையை உடனடியாகக் கூட்டவேண்டும் என்று கோருவதென்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தின் இறுதியில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது; தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் ஸ்தாபனத்தின் கீழ் தமது சுதந்திரத்திற்காகப் போராடும் நமீபியா மக்களுக்கு ஆதரவளிக்கவேண்டியது அணிசேரா இயக்கத்தின் கடமையாகும்.

நமீபியாவிலிருந்து தென்னாபிரிக்காதனதுபடைகளை விலக்கிக்கொள்வதைவலியுறுத்தும் வகையில் அந்நாட்டுக்கு எதிராக எண்ணை பொருளாதார தடைகளை ஐ. நா. விதிக்கவேண்டும். (இ)

# "77-ல் நிலைநாட்டப்பட்ட ஐக்கியம் குலையக்கூடாது"

### — உடுப்பிட்டி எம். பி.

(உடுப்பிட்டி)

"கடந்த பொதுத் தேர்தலின் போது தமிழ் மக்களிடையே நிலைநாட்டப்பட்ட ஒற்றுமையைச் சின்னாபின்னமாக்குவதில் சில தீய சக்திகள் முயற்சி செய்து வருகின்றன. இத்தீய சக்திகள் மீது தமிழ் மக்கள் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் கரவெட்டி சாமியன் அரசடியில் நடைபெற்ற கூட்டணிக் கருத்தரங்கில் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

பேராசிரியர் இ. முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் உடுப்பிட்டி எம். பி. திரு. இராசலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

"தமிழர் விடுதலைக் கூட்டணி ஒரு விடுதலை இயக்கமாகவே செயற்பட்டு வருகின்றது. இதன் இலட்சியங்கள், நடவடிக்கைகள் விடுதலைப் பாதையை மையமாகக் கொண்டே அமைந்துள்ளன.

"எமது தமிழ் மக்களின் பிரச்னை இன்று சர்வதேசப் பிரச்னையாக உருவெடுத்துள்ளது. கடந்த 77 பொதுத் தேர்தலின்போது தமிழ் மக்களிடையே ஏற்படுத்தப்பட்ட ஒற்றுமையே இதற்குக் காரணம் என்பதைத் தமிழ் மக்கள் மறந்துவிடக்கூடாது ஆனால் இந்த ஒற்றுமையைக் குலைப்பதற்கோ சில தீய சக்திகள் இன்று முயற்சிசெய்து வருகின்றன. இதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கக்கூடாது

"இன்று எமது எதிர்க் கட்சித் தலைவரின் நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் எதிரணியில் உள்ளவர்கள் குறை கூறி வருகிறார்கள் எமது தலைமைப் பீடத்தை அழித்து ஒழிப்பதற்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதைத் தமிழ் மக்கள் நன்குணர வேண்டும்"

இவ்வாறு அவர் கூறினார். (அ)

# தமிழரும் ஜனாதிபதியாகும் வாய்ப்பு வேண்டும்

## முன்னாள் அமைச்சர் 'சூரியர்'

(சுழிபுரம்)

"இந்தநாட்டில்வாழும் தமிழரும் ஜனாதிபதியாகும் வாய்ப்பு வேண்டும். இந்நாட்டு தமிழ்மக்களுக்கு சகல துறைகளிலும் சமசந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்."

மேற்கண்டவாறு முன்னாள் தபால், தந்திதொடர்புஅமைச்சர் திரு. செல்லையாகுமாரசூரியர் வழக்கம்பரை அம்மன் கோவில் முன்றலில் நடைபெற்ற சோசலிச முன்னணிப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது "ஜனாதிபதிதேர்தலின் போது தமிழ்மக்கள் தமதுவாக்குகளை பேரம் பேசிப்பயன்படுத்தவேண்டும் சோறு,சுதந்திரமா முதல் வேண்டுமென்று கேட்டவர்கள் இன்றுசுதந்திரத்திற்குமுன்னர் அபிவிருத்தி வேண்டுமென்று குரல்கொடுக்கின்றனர்."

"ஸ்ரீலங்கா சுதந்திரகட்சியினர் இன்று சோசலிசத்தை கைவிட்டுவிட்டனர். அவர்கள் அதாகென்றும் இங்கொன்றும் பேசிவருகின்றனர். சோசலிச இலக்கை அடைந்தால் தான் நாம் சுபீட்சவாழ்வை அடையலாம்" என்றார்.

திரு. ம. சிறிமுருகவேள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. வே. தருமலிங்கம், திரு. அ. இளங்கோ, திரு. கா. வேலாயுதம் உட்பட பலர் உரையாற்றினர். (வெ)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி - உருத்திரபுரம் பகுதிக்கு பயிர்ச்செய்கை உத்தியோகத்தராகதிரு பா. பரமநாதன் கமநலச்சேவை ஆணையாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் விசுவமடு புன்னை நீராவியடியைச்சேர்ந்த திரு, திருமதி பாலகிருஷ்ணனின் மகனாவார். (சீ-வெ)

## ஏற்பு மரணம்

(யாழ்ப்பாணம்)

குப்பை விருண்டி கீறியதால் இருபாலையைச் சேர்ந்த வீரகத்தி சத்தியபாலசிங்கம் (46 வயது) ஏற்புவலிக்குப் பலியானார்.

யாழ் மரண விசாரணை அதிகாரி எஸ். எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினார்.

குப்பைவிருண்டி கீறியதால், கோப்பாய் ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று சுகமடைந்து வீடுதிரும்பியதாகவும், பின் ஏற்புவலி ஏற்பட்டு யாழ். பெரிய ஆஸ்பத்திரியில் மரணமானார் எனவும் கூறப்பட்டது. ஏற்புமரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

## ஈராக் - ஈரான் யுத்தம்

# ஆயுத கொள்வனவில் 5 கோடி டாலர் மோசடி

## ஈரானிய அதிகாரி திருடினாராம்

தெஹ்ரான், ஏப். 20

ஈராக்குக்கு எதிரான யுத்தத்தில் பயன்படுத்துவதற்காக ஈரான் பிரான்சிடம் ஆயுதங்களைக் கொள்வனவு செய்தபோது 5 கோடி 60 லட்சம் டாலர் நிதி மோசடி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆயுதக்கொள்வனவின் போது ஏழு கோடி 60 லட்சம் டாலர் பணம் ஈரானியப்பிரதிநிதிஒருவரினால் களவாடப்பட்டதாக வெளிவந்த வதந்திகளை அடுத்து ஈரானிய அதிகாரி ஒருவர்மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இவ்விவகாரம் குறித்து விசாரணை நடைபெறுவதாகவும் விசாரணை முடிந்ததும் உரியவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அதிகாரி கூறினார். (இ)

## கதகளி நாட்டியமேதை காலமானார்

திருவனந்தபுரம், ஏப் 20

பிரபல கதகளி நாட்டிய மேதை திருவனந்தபுரம் விஷ்ணு நம்பூதிரியாத் நேற்று தமது 72வது வயதில் காலமானார். (இ)

# "வீரத்தைப் பெறுவதற்கு விளையாட்டு அவசியம்"

### - நீதவான் மகேசன்

(உடுப்பிட்டி)

"விளையாட்டுக்களை நாம் விளையாட்டாகக் கருதிவிடக் கூடாது. எமது வாழ்க்கையைச் சரியான வழியில் சீரான ஒழுங்கு முறையில் நடத்தி அதில் வெற்றி பெறுவதற்கு விளையாட்டுக்களே வழிகாட்டுகின்றன."

இவ்வாறு பருத்தித்துறை நீதவான் திரு. கே எஸ் மகேசன் நெல்லியடி எஸ். ஸி. ஸி. விளையாட்டுக்கழகம் பத்தாண்டை முன்னிட்டு நடாத்திய விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. மகேசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"நாம் பிறப்புமுதல் இறப்பு வரை எமது வாழ்வில் பல எதிர் நீச்சல்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. தவழும் குழந்தை எழுந்து நடப்பதற்கும் பின்னர் வாழ்வில் முன்னேறுவதற்கும் வீரம் தேவை வீரத்தின் துணையுடனேயே வாழ்வில் முன்னேற முடியும். விளையாட்டின் மூலம் வீரத்தை உருவாக்கிக் கொள்ளமுடியும்.

"வழிப்பறி செய்வதும், கொள்ளையடிப்பதும் வீரமல்ல. அதர்மத்தை எதிர்த்து நேர் நின்று போராடுவதே வீரமாகும். இந்த வீரத்தையே தமிழர்களாகிய நாம் விளையாட்டுக்கள் மூலம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்."

வெற்றி பெற்றோருக்கான பரிசில்களை திருமதி மகேசன் வழங்கினார். விழா முடிவில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (அ)

## இணைச் சம்பியனாக தெரிவு

(அரியாலை)

சாவகச்சேரி பொலிஸ் - பொதுமக்கள் நட்புறவுச் சங்கம் நடாத்திய ஏழுபேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் சாவகச்சேரி தெற்கு விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துமோகனதாஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. இரு கழகங்களும் 2 : 2 கோல்களைப் போட்டு இணைச் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டன. மத்தியஸ்தராகத் திரு வாமதேவன் கடமையாற்றினார். (அ)

# மன்னர் காலித், தட்சர் சந்திப்பு

ரியாத், ஏப். 20

பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரெட் தட்சர் சவூதி அரேபியா மன்னர் காலித்துடன் மத்திய கிழக்கு விவகாரம் ஆப்கானிஸ்தானில் சோவியத் தலையீடு ஆகிய சர்வதேச விவகாரங்கள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

அரை மணித்தியாலமாக நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையின்போது பாரசீக வளைகுடா பிராந்தியத்தின் பாதுகாப்பு குறித்து பிரிட்டிஷ் காட்டிவரும் அக்கறை குறித்து திருமதி தட்சர் விரிவாக எடுத்துக்கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

சவூதி அரேபியாவில் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள திருமதி தட்சர் நேற்று இஸ்லாமிய முறைப்படி நீளக்கையுடன் கூடிய முழங்காலுக்குக்கீழ் வரை நீண்ட சட்டை அணிந்திருந்திருந்தார். (இ)

# இந்தியாவில் மேலும் பல சுதந்திர வர்த்தக வலயங்கள்

## நிதிஅமைச்சர் 'வெங்கட்' தகவல்

புதுடில்லி, ஏப். 20

இந்தியாவில் மேலும் பல சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. உத்தேச சுதந்திர வர்த்தக வலயங்கள் மூலம் நாட்டின் ஏற்றுமதியை ஊக்குவிக்கவும் வர்த்தகப் பற்றுக்குறையைப் போக்கவும் வாய்ப்புஏற்படும்

இவ்வாறு இந்திய நிதி அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

இந்திய வர்த்தக கைத்தொழில் மன்றத்தின் வருடாந்த மகாநாட்டில் உரையாற்றியபோதே திரு. வெங்கட்ராமன் மேற்கண்டவாறு கூறினார்.

பம்பாயிலும் குஜராத்திலும் உள்ள சுதந்திர வர்த்தக வலயங்களுடன் மேலும் பல வலயங்கள் அமைக்கப்பட உள்ளன என்றும் அவர் கூறினார். (இ)

# யாழ். மாவட்ட அபிவிருத்தி: ஐந்து ஆண்டுத் திட்டம்!

## அரசாங்க அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

"யாழ். மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஐந்து ஆண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அரசாங்கம் வெளிநாடுகளின் உதவியுடன் அபிவிருத்தியடையச் செய்வதற்கு முயற்சி எடுத்துள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு 750 கோடி ரூபா தேவையாக இருக்கின்றது. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் யாழ். மாவட்ட விவசாயம், கைத்தொழில், கடற்றொழில், கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் அபிவிருத்தியடையும்."

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமி வட இலங்கை கைத்தொழில் ஒன்றியத்தின் கட்டிடத்திறப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அங்கு தொடர்ந்து அரசாங்க அதிபர் உரையாற்றும்போது கூறியதாவது:-

"யாழ். மாவட்டத்தை எந்த முறையில் அபிவிருத்தி செய்யலாம் என்பதை ஆராய்ந்து துரித முறையில் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு வட இலங்கை கைத்தொழில் ஒன்றியம் முன்வரவேண்டும். இந்த ஒன்றியத்துக்கு எனது ஒத்துழைப்பு கிடைக்கும்" என்றார்.

இவ்ஒன்றியத்தின் புதிய கட்டிடத்தை இலங்கை வங்கி உதவிப் பொது முகாமையாளர் திரு எம். ஜே ஏ. ஜெயநாதன் திறந்து வைத்து உரையாற்றினார்.

அரசஷேோ அதிபர் திரு. அரசரத்தினம் இந்த வைபவத்திற்கு தலைமை வகித்தார்.

ஒன்றியத்தின் செயலாளர் செபஸ்தியாம்பிள்ளை உட்பட பலர் உரையாற்றினர். (இ-வெ)

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
50-வது நாளை நோக்கி
ரஜனி காந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ சௌகார் ஜானகி நடித்த
தீ
இலங்கை-இந்திய தயாரிப்பு

SANTHI JAFFNA Daily 5 Shows
A HAUNTING VISION OF REINCARNATION
MARSHA MASON — ANTHONY KOPKINS
"AUDREY ROSE"
(More Suited For Adults)
அடுத்தவெளியீடு புத்தம் புதியபிரதி 'அரசிளங்குமரி'

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சரோஜாதேவி
இருவர் உள்ளம்

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-15, 4-45, 7 00, & 9-45
PERFECT FRIDAY
(வயதுவந்தவர்களுக்கு)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
2வது கொட்டகை நிறைந்த காட்சி வாரமாக நடைபோடுகிறது.
தினசரி 4 காட்சிகள்
10-30, 2 30, 6-00, 9-30.
★ சிவாஜி ★ கே. ஆர். விஜயா
★ தேங்காய் சீனிவாசன் ★ மனோரமா
★ சுந்தரராஜன் நடித்த
ரிஷிமூலம்
(வண்ண படம்)
பார்த்தவர்கள் நாவில் என்றும் ஒலிப்பது 'ஐம்பதிலும் ஆசை வரும் ஆசையுடன் பாசம் வரும்'
காணத் தயாராகுங்கள்.

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

மனோகரா தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
கவரிமான்

ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!
ராஜா யாழ்ப்பாணம் சாந்தி மட்டுநகர்
நகரில் திரையிடப்பட்ட படங்களில் முன்னணியில் உள்ளது. பெண்கள் கூட்டம் அலைமோதுகிறது.
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30
தினசரி 2-30, 6-15, 9-30
● பாக்யராஜ் ● ரதி ● சுதிர்
புதிய வார்ப்புகள்
(ஈஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்: பாரதிராஜா இசை: இளையராஜா


# யாழ். விளையாட்டு கழக நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விளையாட்டுக் கழகத்தின் எட்டாவது வருடாந்தக்கூட்டம் கஸ்தூரியார் வீதியிலுள்ள கழகமண்டபத்தில்சென்ற சனிக்கிழமை காலை நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

போஷகர் திரு. எஸ். சிவா சுதிரமலை தலைவர் திரு. வி. இராசேந்திரன் உபதலைவர் திரு டபிள்யு விஜய சிறி செயலாளர் திரு. பொ. ப. ராசா, உபசெயலாளர் திரு. எஸ். குமாரவேல் தனாதிகாரி திரு. ஐ குமாரவேல் எண்மர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப் பெற்றது.

# பிரிவுபசாரம்

(சுழிபுரம்)

தொல்புரம் அரசினர்வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச்செல்லும் டாக்டர் ஆ. இராசநாயகத்திற்கு அவ்வூர்பொதுமக்களால் வட்டு எம்.பி. திரு தா. திருநாவுக்கரசு தலைமையில் பிரிவுபசார வைபவமொன்று அளிக்கப்பட்டது

இவ்வைபவத்தில் எதிர்க்கட்சித்தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், சட்டத்தரணி கி. சிவபாக்கியநாதன், சட்டத்தரணி த. விக்னராசா, திரு எஸ். அருணாசலம். வலிகாமம்மேற்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. எஸ். செந்தில்வடிவேல், திரு. க. வாமதேவன் உட்பட பலர் பாராட்டுரைவழங்கினர்.

(வெ

# தங்கச்சங்கிலி கொள்ளை

(பண்டத்தரிப்பு)

கோவில்தேர் உற்சவத்திற்கு சென்ற பெண்மணியொருவரின் நாலாயிரத்து 500ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டது. சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலய தேர் உற்சவத்திற்குச் சென்ற சுழிபுரத்தைச்சேர்ந்த திருமதி தம்பிமுத்து முத்தாச்சிப்பிள்ளையின் தங்கசங்கிலியே கொள்ளையடிக்கப்பட்டது.

கோவிலில் அர்ச்சனைசெய்துகொண்டிருந்த வேளையில் இவர் அணிந்திருந்த சங்கிலி சனநெருக்கடியை பயன்படுத்தி அறுக்கப்பட்டது. இது தொடர்பாக சங்கானைப் பொலிஸ்நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து பொலிசார் ஆறுமுகம் சிவலிங்கத்தை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து விசாரணை மேற்கொண்டுவருகின்றனர்.


ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஷோபா நடித்த
முள்ளும் மலரும்
போன்:881 (கலர்)

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-30 9-30
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்.-லதா
மீனவநண்பன்
(ஈஸ்மன் கலர்)

வெஸ்லி
(சாவகச்சேரி)
தினசரி 6-15, 9-30,
சனி, ஞாயிறு 2-30
சிரிக்கும்சலங்கை


# நாடக வளர்ச்சிக்கு ஒரு யோசனை

(கோப்பாய்)

"காலத்துக்கேற்பநாடகங்கள் நவீன மயமாக்கப்படவேண்டும் விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட இந்நிலையில் நாம் இன்னும் பழையபாணியில்மட்டும் நாடகங்களைத் தயாரித்துக்கொண்டிருப்போமானால் நாடகம் வளரவில்லை என்பதேஅர்த்தமாகும். மக்களைக்கவரக்கூடியமுறையில் அமைந்த சிறந்த உத்திகளை நடிகர்களும், தயாரிப்பாளர்களும் கையாளவேண்டும்.", என்றுகோப்பாய் அரசினர் ஆசிரியபயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற நாடகவிழாவுக்கு தலைமைவகித்த கலைப்பேரரசு ஏ ரிபொன்னுத்துரை கூறினார்.

அன்றுநடைபெற்ற நாடகப் போட்டியில் "வீரகாவியம்" எனும்நாடகம் ஆண்கள்பிரிவில்முதலாமிடத்தையும் "பாதுகைபெற்ற பாக்கியம்" பெண்கள் பிரிவில் முதலாமிடத்தையும்பெற்றன. ஆண்கள்பிரிவில் சிறந்தநடிகராக திரு. கனக மகேந்திராவும், சிறந்த பெண் நடிகராக இராமநாதனும் சிறந்த உபநடிகராக திரு. க. சிங்காரவேலுவும் பெண்கள் பிரிவில் சிறந்த நடிகையாகத் திருமதி விஜயலட்சுமி ஸ்ரீநிவாசனும், சிறந்த ஆண் நடிகையாகத் திருமதி பவுதாரணி பத்மநாதனும் தெரிவு செய்யப்பட்டனர் முல்லைமணி, குறமகள் ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

(அ)

# நாடும் நடப்பும்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட பூரணத்துவமான பல்கலைக் கழகம் ஒன்று உருவாகிவருகிறது. இதேபோல் தான் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பின்னர் தமிழ்ஈழமாக மலரவழிபிறக்காதோ?" என்று கேட்டார்.

தேர்தல் பிரசாரம் தொடங்கட்டும். இன்னும் பல சுவையான உதாரணங்களையும் விளக்கங்களையும் கேட்கலாம்!

- ஊர்சுற்றி

# தேவாலயத்தில் குண்டு வெடிப்பு 9 பேர் பலி!

மணிலா, ஏப் 20

ஈஸ்டர் ஞாயிறுதின ஆராதனையின் போது நேற்றிரவு தென் பிலிப்பைன்ஸிலுள்ளரோமன் கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் இடம் பெற்ற இரண்டு குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒன்பது பேர் பலியானார்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது.

தேவாலய பிரார்த்தனை மண்டபத்தில் ஒரு குண்டும் வாசலில் மற்றைய குண்டும் வெடித்தது இச்சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் யார் என்பது இன்னமும் கண்டுபிடிக்கப் படவில்லை.

(க)

# நவஜீவன்ஸ் கழகத்திற்கு முதலிடம்

(உடுப்பிட்டி)

கரவெட்டிகிழக்கு வளர்மதி விளையாட்டுக்கழகம்புத்தாண்டு தினத்தைமுன்னிட்டுநடாத்திய கரப்பந்தாட்டசுற்றுப் போட்டியில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் 'ஏ' விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம்இடத்தை உடுப்பிட்டி நவஜீவன்ஸ் 'பி' விளையாட்டுக்கழகமும், மூன்றும் இடத்தை கரவெட்டி மத்தொனி திருவள்ளுவர் சனசமூக நிலைய விளையாட்டுக்கழகமும் பெற்றுக்கொண்டன.

வெற்றியீட்டிய கழகங்களுக்கான பரிசில்களை துன்னாலை தெற்கு கிராமசேவைஉத்தியோகத்தர் திரு செ. அ ஞானச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வழங்கினார். பரிசளிப்புவைபவத்தைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 9-ம்திகதி

(செவ்வாய்க்கிழமை 21-4-1981))

மேடம்; வெற்றி உமது அருகில் விரைந்து வரும். எதிர்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள் களஸ்திர வழியாலும் நன்மைகள் சேரும காதலர்களுக்கு இனிப்பான தினம்.

இடபம்: செய்தொழிலில் சிரமங்கள் தோன்றக்கூடும். உடல் நலம் சிறிது பாதிக்கப்படலாம் நண்பர் ஒருவர் உங்கள் காலை வாரிவிடுவதற்கு முனையக் கூடும் அவதானம வேண்டும்.

மிதுனம்: பரம் பொருளின் அருளுக்கு இடமுண்டு பரோபகாரசிந்தை மேலிடும். பொதுப்பணிகளில் ஈடுபடுவீர்கள் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவர் அந்தஸ்திலும் முன்னேற்றமுண்டு.

கடகம்: கற்றுதனால் பயன் இன்று கட்டாயம் கிட்டும். அறிஞர்கள் போற்றுவர் ஆதரவும் கிடைக்கும் செல்வாக்கான தினம்.

சிங்கம்: கூட்டுவியாபாரத்தில் முன்னேற்றமுண்டு வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும். கடமையில் ஆர்வம் கிடைக்கும் டாக்டர்களுக்குச் செல்வாக்குப் பெருகும் நிம்மதியான தினம்.

கன்னி; நிதியில் முடக்கம் ஏற்படும் சிலர் வீண் பழிக்கும் இலக்காவார்கள் விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவை எடுக்கும். பயிர்ச்செய்கையில் பாதிப்பு ஏற்படலாம் வெற்றி உண்டு.

துலாம்; எவ்விடயத்திலும் நன்றாக ஆலோசித்த பின்பே செயலாற்றவும் ஆணவப் போக்கு மற்றவர்களின் வெறுப்பைத் தேடித்தரும். முகமன் பேசுவோர் விடயத்தில் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

விருச்சிகம்: போதுமென்ற மனத்துடன் இருப்பீர்கள் எதிலும் நிறைவு தென்படும். முதியவர் ஒருவரின் அறிவுரை உங்களுக்குப் புதியபாதையைக் காட்டும் குடும்பத்திலும் அன்பு தவளும்.

தனு: ஆசாரக் குறைவான சம்பவங்கள் இடம் பெறும் உடல்நலத்தில் அதிக கவனம் செலுத்தவும் கொடுக்கல் வாங்கல்களில் இன்று கவனம். செலுத்தவும்.

மகரம்: பொன்னான சந்தர்ப்பம் இன்று கிடைக்கும். திறமைக்கு முதலிடமுண்டு பெரியவர்களின் ஆதரவு கிடைக்கும். இதயச்சுமை அகலும் தொழில் துறையில் புதிய வெற்றி உண்டு.

கும்பம்: இதயத்தில் நல் எண்ணங்கள் தோன்றும். கடந்தகாலச் சம்பவமொன்று எதிர்கால முன்னேற்றத்திற்கு வழி அமைக்கும் வேண்டிய ஒருவரின் அமைதியும் கிடைக்கலாம்.

மீனம்: ஆயுத பயத்திற்கும் அவசரக் கவலைக்கும் இடமுண்டு. கைகலப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளவும் எதிரிகள் விடயத்தில் அதிக விழிப்புடன் இருக்கவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

டில்கா
ரேடியோ
அன்
ரீ.வி
டெக்னீஷியன்ஸ்
பஸ்நிலையம்
எதிர்மேல்மாடி
உங்கள்
ரேடியோக்கள்
டேப்றெக்கோடர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
எதுவானாலும்
உடன்சீரமைத்துக் கொள்ள,
202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஈழநாடு
The Eelanaadu
60 சதம்

## இ. த. ஆ. சங்க கோப்பாய்க்கிளை

(கோப்பாய்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் கிளை நிர்வாகிகள் தெரிவு கடந்தவாரம் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் தலைமையில் நடைபெற்றது. கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. கனக மகேந்திரா, செயலாளர் திரு. ச. சரவணபவானந்தன் பொருளாளர் திருமதி மகேஸ்வரு கந்தசாமி உபதலைவர் திரு. வ. சண்முகலிங்கம் உப-செயலாளர் திரு. இ. அருளானந்தசிவம். (அ)

## சுதந்திரக்கட்சி

1 ம் பக்கத் தொடர்ச்சி

ரில் சில பெயர்கள் வருமாறு: ஜனாப் மன்சூர், பாடசாலை அதிபர் பூ. ராசா, நல்லூரைச் சேர்ந்த திரு குமாரசாமி, சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. சிவஞானம், ஆசிரியர் இரட்டாய்.

இப்பட்டியல் இன்று சுதந்திரக்கட்சியின் தலைமைப்பீடத்துக்கு அனுப்பப்படுகிறது.

---

### யாழ். செயலகத்தில்

# வேலை இழந்தவர்களில் எத்தனை பேர் மீண்டும் வேலை பெற்றனர்?

## பாராளுமன்றத்தில் கா. பொ. கேள்வி எழுப்புவார்

(கொழும்பு)

"1980 ஜூலை மாதத்தில் யாழ்ப்பாண செயலகத்தில் உத்தியோகத்தர்கள் எத்தனை பேர் வேலை நிறுத்தம் செய்தார்கள்? இவர்களில் இன்று வரை எத்தனைபேருக்கு மீள வேலை கொடுக்கப்பட்டது? இன்னும் மீளவேலை கொடுக்கப்படாதவர்களின் பெயர், பதவி, வேலை இன்னும்கொடுக்கடாத காரணம், இவர்களுக்கு வேலைகொடுப்பதற்கு இன்னும் எவ்வளவு காலம் செல்லும் என்பதையும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கூறுவாரா? மேற்கண்ட கேள்விகளை உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகத்திடம் அடுத்த மாதம் 7ம் திகதி பாராளுமன்றம் கூடும்போது கேட்பதற்கு ஊர்காவற்றுறை எம்.பி திரு கா. பொ இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

---

# இப்படியும் நடக்கிறது

காதலில் ஏற்படும் தோல்வியினால் எத்தன்மையான அசம்பாவிதங்கள் நிகழுகின்றன என்பது பழைய செய்தி. சாம்ராஜ்யங்களே அழிந்துபோயிருக்கின்றன!

சுருக்கமாகச் சொல்லப்போனால், தங்களது உயிரை எப்படியும் மாய்த்துக்கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தில் பல 'வழி'களை இவர்கள் தேடுவதுண்டு. இந்த வரிசையில், தாய்வானில் என்ன நடந்திருக்கிறது என்று பாருங்கள்.

லாங் என்பது அந்த இளைஞனின் பெயர். தனது காதலி மீது உயிரையே வைத்திருந்தான். ஆனாலும் லாங்கின் காதல் கைகூடுவதாக இல்லை. பலதடவைகள் அவன் முயற்சித்தும் பலன் கிடைக்கவில்லை. லாங் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்!

சம்பவதினம் லாங் தனது சார்சட்டைப் பைக்குள் ஒரு வெடிகுண்டை தயார் நிலையில் வைத்துக் கொண்டு தனது காதலியைச் சந்திக்கச் சென்றான். அவள் அருகே நெருக்கமாக நின்று கொண்டு, நிறைவேறாத தனது காதல் பற்றி அவளுடன் விவாதித்துக் கொண்டிருந்தான். நேரம் சரியாக வந்தது அவ்வளவுதான்! குண்டு வெடித்தது— கூடவே லாங்கினதும், அவனது காதலியினதும் உடல்கள் சின்னாபின்னமாகச் சிதறிவிட்டன! இச்சம்பவம் இம் மாதம் தாய்வானில் நிகழ்ந்தது.

ஊடுருவி

---

### வடபிராந்திய இ.போ.ச,

## புதியதிட்டம் மூலம் கூடுதல்வருவாய்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் தகுதிவாய்ந்த அதிகாரி திரு எஸ் கனகரத்தினம், விளம்பரங்களின்மூலம் போக்குவரத்துச்சபைக்கு வருவாயைத் தேடிக்கொடுக்கும் புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதற்காக, யாழ்ப்பாணம் மத்திய பஸ்நிலையத்தின் பஸ்தரிப்பு இடங்களை வர்த்தக ஸ்தாபனங்களுக்கு விளம்பரத்திற்கு வழங்குமாறு பணித்துள்ளார்.

அண்மையில் யாழ் மத்திய பஸ்நிலையத்தின் பஸ்தரிப்பு நிலையங்களை விளம்பரத்திற்கு வழங்கியதன்மூலம், வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு அதிகமாக சம்பாதித்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இப் புதிய நடவடிக்கை மூலம் மேலும் சுமார் எழுபதாயிரம் ரூபாய் வருமானம் பெறமுடியும் என்று இப்பொழுது எதிர்பார்க்கப் படுகிறது.

# சாரதி, காப்பாளர் கௌரவிக்கப்படுவார்கள்

(யாழ்ப்பாணம்)

பஸ்ஸில் ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தைக் கண்டெடுத்து, கையளித்த சாரதி, காப்பாளர் ஆகிய இருவருக்கும் சன்மானம் வழங்கப்பட இருக்கின்றது.

சங்கானை - யாழ்ப்பாணம் பஸ்வண்டியில் பிரயாணம் செய்த பிரயாணி ஒருவர் ஆயிரத்து முப்பதிஏழு ரூபா பணத்தை தவறவிட்டுவிட்டார். இதைக் கண்டெடுத்த குறிப்பிட்ட பஸ் சாரதி வி. திருநாவுக்கரசுவும், காப்பாளர் திரு. ஆர். சிறிபவானும் அப்பணத்தை பஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

இப்பணத்தை தவறவிட்டவர்களுக்கு "ஈழநாடு" பத்திரிகைமூலம் யாழ்ப்பாணம் மத்திய பஸ்நிலைய மேலதிக பொறுப்பதிகாரி திரு. க. தனபாலசிங்கம் விடுத்த அறிவித்தலைத்தொடர்ந்து சுழிபுரம் நடுக்குறிச்சியைச் சேர்ந்த பரநிருபசிங்கம் நாகேஸ்வரி என்பவர் சரியான அடையாளங்களைக் கூறி அப்பணத்தை பெற்றுக் கொண்டதுடன் இரண்டு பஸ் ஊழியர்களின் நேர்மையைப் பாராட்டியதுடன் இருவருக்கும் சன்மானம்வழங்கவும் முன்வந்துள்ளார். இந்நிகழ்ச்சி இம்மாதம் 27ந் திகதி யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் இடம்பெறும். சபையின் தகுதிவாய்ந்த அதிகாரி திரு. எஸ். கனகரத்தினமும் இந்நிகழ்ச்சியில் கலந்து பஸ் ஊழியர்களைக் கௌரவிப்பார்.

---

### "யாழ். பாடசாலைகளின்

# விளையாட்டுத் தரம் குன்றிவிட்டது"

## பரிசளிப்பு விழாவில் அதிபர் கவலை

(யாழ்ப்பாணம்)

"யாழ்ப்பாணப் பாடசாலைகளின் விளையாட்டுதரம், கடந்த சில வருடங்களாகக் குன்றிவிட்டது. இதற்குக் காரணம் கல்வித்துறையில் ஏற்பட்டிருக்கும் கடுமையான போட்டியே" என்று தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் திரு க. பாலசுந்தரம் வருத்தம் தெரிவித்துள்ளார்.

வர்த்தகவிளான் வாலிபர் சங்கத்தின் வருடாந்த தமிழ்ப் புதுவருட விளையாட்டுப் போட்டி பரிசளிப்புவிழாவில் பேசுகையிலேயே திரு பாலசுந்தரம் மேற்படிக் கருத்தை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்; கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள போட்டி காரணமாக மாணவர்கள் பாடசாலை வகுப்புகள் முடிந்ததும் உடனடியாக தனியார் கல்வி நிலையங்களை நாடிச் சென்றுவிடுகின்றனர். இதனால் விளையாட்டுத்துறையில் மாணவர்களால் அதிக அக்கறை காட்ட முடிவதில்லை. இளைய தலைமுறையினருக்கு கல்வி எவ்வளவு முக்கியமோ அதேபோல விளையாட்டும் முக்கியமாகும்" என்றார்.

இப் பரிசளிப்பு விழாவிற்கு வர்த்தகவிளான்வாலிபசங்கத் தலைவர் செல்வன் க. கலைச்செல்வம் தலைமைவகித்தார். திருமதி கனகாம்பிகை பாலசுந்தரம் வெற்றிபெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினார். பரிசளிப்பு நிகழ்ச்சி முடிவில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

---

## யாருடையது?

யாழ். மூஸ்லிம் வீதியைச் சேர்ந்த ஏ எம். அன்வர் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட உடையாள அட்டையொன்று 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளவும்.

## தேவை

'பிறசியர்ஸ்' வெட்டித் தைக்கக்கூடிய பெண்கள் தேவை. நேரில் வரவும் "நதுலாம்ஸ்" 181, அரசடி வீதி, (றெயில்வே கடவைஅருகில்) கந்தர்மடம். 8931

## பயிற்சி

றேடியோ-டெலிவிசன் ஏயர் கொண்டிசனிங், வெல்டிங் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சிகள் ஆரம்பம் 25 4-81 அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, 11, மொம்சாக் கட்டிடம், ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். 8930

---

# "முதலாவது ஆதீனத்தை நிறுவியபெருமை பரமாச்சார்ய சுவாமிகளையே சாரும்"

(யாழ்ப்பாணம்)

"நல்லை நகர் ஆறுமுகநாவலருக்குப் பின்னர் சைவத்தையும், தமிழையும் வளர்க்க அரும்பாடுபட்டு வந்தவர் பரிபூரண நிலையை அடைந்த பரமாச்சாரிய சுவாமிகளாவர்".

இவ்வாறு யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. ஆ. துரைராஜசிங்கம் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகாசன்னிதானமான ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகஞான சம்பந்த பரமாச்சாய சுவாமிகளின் பீடாரோகண விழாவில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: "இலங்கையில் முதலாவதாக ஆதீனமொன்றை தொடக்கி பலராலும் போற்றக்கூடியவகையில் இயங்கச் செய்த பெருமை பரிபூரணமடைந்த பரமாச்சார்ய சுவாமிகளுக்கே உரியது.

"பரமாச்சாரிய சுவாமிகள் செய்துவந்த சைவப்பணிகளை அனுபவம் வாய்ந்த அவரின் வாரிசான இரண்டாவது குருமகாசன்னிதானம் செய்துவருவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

"இலங்கையில் மாத்திரமன்றி இந்தியா, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளிலும் பரமாச்சாரிய சுவாமிகள் சங்கீத கதாப்பிரசங்கங்கள் மூலம் சைவசமயத்தைப் பரப்பிவந்த காலங்களில் நல்லை ஆதீனப் பணிகளை திறமையாக நடாத்தி வந்தவர் தற்போது பதவிபெற்றிருக்கும் இரண்டாவது குருமகாசன்னிதானமாவார்" என்றார். (வெ)

---

## வேலை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கருணானந்தராசா, வீ. மகேந்திரராசா, எம். நியால், மூ. கெங்கேஸ்வரமூர்த்தி ஆகியோரிடம் மொத்தமாக ஒரு லட்சத்து எண்பதினாயிரம் ரூபா வசூலித்து, அதற்கானபற்றுச்சீட்டும் கொடுத்ததுடன் தன்னால் இவர்கள் ஏமாற்றப்பட்டால் இவர்களுடைய பணத்தைத் திரும்பக் கொடுப்பதாகவும் சந்தேகநபர் கைச்சாத்திட்டு கடிதம் கொடுத்திருந்தாராம்.

ஈராக்கில் சகல வசதிகளுடன் வேலைபெற்றுத் தருவதாக பதினுப்பேருக்கும் உறுதியளித்து பாகிஸ்தான் வழியாக ஈராக்கிற்கு அழைத்துச்செல்வதாகக் கூறி கராச்சிக்கு அழைத்துச் சென்றதாகவும், கராச்சியில் விசாபெறமுடியாதுஎன்று கூறி லாகூருக்கு அழைத்துச் சென்று அங்கு சந்தேகநபர் தலைமறைவாகியதாகவும் தங்களது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். சி

## பொதுமக்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

சில முக்கிய தகவல்களைத் தொடர்ந்து இவர்கள் விசாரணைக்குட்படுத்தப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

---

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் ... வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் ஏப்பிரல் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. QH 6648/78 The Eelanaadu P. B No. 6, Telegram: "Eelanaadu" Phone: 889 : 8188